# யுனிடியின் தரிசனம்

## இந்தியா நாட்டைச் சேர்ந்த யுனிடி எனப்பட்ட ஒரு வாலிபப் பெண்ணின் தரிசனம்




### (சீலோங் எழுப்புதலின் பகுதி)

கர்த்தராகிய இயேசுவை நான் தரிசனமாக கண்ட நாள் வாலிப ஞாயிறு, மார்ச் மாதம் 2006, இயேசு எனக்கு மூன்று காரீயங்களை கூறினார்.

1. பரிசுத்தவான்களின் எடுத்துக்கொள்ளுதல்
2. மிருகத்தின் ஆட்சி
3. தேவனின் நியாயத்தீர்ப்புக்கள்

அவருடைய சித்தத்தின் படி நடந்த எல்லா பரிசுத்தவான்களும் அவர் வருகையின் போது இயேசு வானங்களின் நடுவில் தோன்ற எடுத்துக்கொள்ளப்பட்டன. அவருடைய சித்தத்தை பூமியின் மேல் செய்த எல்லோரையும் எடுத்துக்கொண்டார். அடக்கப்பட்டிருந்த அவருடைய உண்மையுள்ளவர்களும் வானங்களுக்கு அவரது வருகையின் போது எடுத்துக்கொள்ளப்பட்டன.



அவரது எடுததுக்கொள்ளுதலின் பின்னர், நான் 666 என்ற வலுசர்ப்பத்திற்கு எதிராக தேவதூதர்கள் யுத்தம் பண்ணுவதைக் கண்டேன். அவனுக்கு பரலோகங்களில் இடமில்லாமல் பூமியிற்கு தள்ளப்பட்டு விழுந்தான். அந்த வலுசர்ப்பம் அநேக வருடங்களுக்கு பூமியின் மேல் ஆட்சி செய்வான் எனக் கூறியது. அவன் போக பின்னர் இன்னுமொரு மிருகம் 10 தலைகளுடனும் 7 கொம்புகளுடனும் வந்தது. அது கிரீடங்களை தன் தலையில் தரித்துக்கொண்டு தூஷணத்திற்குரிய நாமங்களை எழுத்தில் கொண்டும் காணப்பட்டது.



***அறிவிப்பாளர்: அது ஒரு மானிடனாகவா தென்பட்டது?***

அது ஒரு மானிடனாக தென்பட்டாலும் மிகவும் பயங்கரமான தோற்றத்தைக் கொண்டிருந்தது. அதன் ஆட்சியின் போது, அரிசியிலும் அதன் இலக்கமானது காணப்பட்டது. பணத்திலும் கூட அதன் இலக்கம் முத்திரையிடப்பட்டிருந்தது. அவன் மேல் விசுவாசம் வைத்தவர்கள் மேல் அதன் முத்திரையாகிய 666 முத்திரை காணப்பட்டது.

***அறிவிப்பாளர்: அது 666 என்ற முத்திரையை எல்லா வியாபாரத்தின் மேலும் போட்டதா? அப்படியானால் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தவர்களுக்கு என்ன நடந்தது?***



இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தவர்கள் அந்நேரத்தில் கடினமான விதத்தில் உபத்திரவப் படுத்தப்பட்டார்கள். அவர்களது கண்கள் பிடுங்கிஎடுக்கப்பட்டும். அவர்களுடைய தொண்டைகள் பிளக்கப்பட்டும் பெரிய தாட்சிகளில் பொறிக்கப்பட்டார்கள்.




இயேசு பூமிக்கு திரும்பி (இரகசிய வருகையின் பின்) வரும்போது அவர் பூமியின் மேல் கீழே இறங்கி வந்தார். அப்பொழுது 666 என்ற இலக்கத்தைக் கொண்ட

வலுசர்ப்பமானது இயேசுவின் மகிமையைக் கண்டு அதைத்தாங்க முடியாமல் ஒடியது. இயேசு பூமிக்கு இரண்டாம் தரம் வரும் போது உபத்திரவ காலத்தல் (வலுசர்ப்பத்தின்) மரித்தவர்களும் (666 என்ற எண்ணை எடுக்காமல்) தங்கள் கல்லறைகளிலிருந்து எழுந்தும் கைவிடப்பட்டவர்களும் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.

தேவதூதர்கள் தங்கள் எக்காளங்களை ஊத எல்லா மரித்தவர்களும் தங்கள் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து தேவனின் நியாயத்தீர்ப்பு நாளுக்கு முகம் கொடுக்க எழுந்து சென்றார்கள்.

***அறிவிப்பாளர்: அற்புதம், அற்புதம், சரி வேறு என்ன யுனிடி?***



பின்னர் இயேசு ஆடுகளை இடது பக்கத்திற்கும் செம்மறியாடுகளை வலது பக்கத்திற்கும் அனுப்பினார். இந்த ஆடுகளே அவருடைய சித்தத்தை செய்யாமலும் 666 என்ற இலக்கத்தை எடுத்ததுமானவர்கள்.

வலது பக்கத்திலிருந்தவர்கள் செம்மறியாடுகள், அவர்கள் மேல் சிலுவையின் அடையாளம் காணப்பட்டது அதுமட்டுமல்ல அவர்கள் இயேசுவின் சித்தத்தை செய்தவர்கள்.

பின்னர் இயேசு பிரிதது வைத்ததான ஒவ்வொரு கூட்டத்திலுமுள்ளவர்களை, ஆடுகளையும் செம்மறியாடுகளையும் தேவன் நியாயந்தீர்த்தார். ஒவ்வொருவரும் தனித்தனியாக நியாயந்தீர்க்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கையின் பாவங்களானது ஒரு பெரிய திரைச்சீலையில் காண்பிக்கப்பட்டது.

தேவன் கேட்டார், “***ஒருவர் உங்களுக்கு இயேசு கிறீஸ்துவைப்பற்றி சாட்சி கூறிய போது நீங்கள் மனம்திரும்பினீங்களா இல்லையா?***” அவர்கள், **‘இல்லை’** என் பதிலளித்தால் அவர்களை நரகத்திற்கு தள்ளப்பட்டார்கள். நரகத்திற்கு தள்ளப்பட்டவர்கள் ஒரு அடியற்றக் குழிக்குள் விழுவதையும் எங்குமே செல்லமுடியாமல் அவர்கள் இங்கும் அங்குமாக வீசப்பட்டதைக் கண்டேன். அங்கே ஒரு பற்றி எறிகிறதான அக்கினி காணப்பட்டது. அவர்கள் இயேசுவின் இரக்கத்தைக் கேட்டு கத்திக் கதறி அழுதாகள்.

அதுவுமல்ல நான் புழுக்கள் நிறைந்ததும், பெரிய பாம்புகளைக் கொண்டதுமான நரக அக்கினியைக் கண்டேன். அங்கே ஜனங்களையும் கண்டேன். புழுக்கள் ஒரு மூக்குத்துவாரத்திற்கூடாக சென்று மற்றதற் கூடாக வருவதையும் கண்டேன். ஒரு பெரிய ஒட்டிப்பிடிக்கும் மயிர்க்கொட்டியானது ஒருவனது முகத்தின் கன்னத்தில் ஒட்டிக்கொண்டிருந்தது. ஒரு பாம்பு உடம்பைச் சுற்றி சுருண்டும் மயிர்க்கொட்டிகளானது மனிதர்களின் உடம்புகளின் மேலெல்லாம் ஓடுவதையும் கண்டேன்.

### மனம்திரும்புதலானது பூமியில் மட்டுமே மரணத்தின் பின்பல்ல

அறிவிப்பாளர்: அதன் பின் என்ன நடந்தது?

இயேசு கூறினார் மனம்திரும்புவதற்கு இதுவே காலம். இந்த எழுப்புதலின் போது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள், இயேசு இந்த எழுப்புதலைக் கொடுத்தது ஏனெனில் இயேசு உங்களை நேசிக்கின்றார்.

அறிவிப்பாளர்: வேறு என்ன யுனிடி?

அவ்வளவுமே.

யுனிடியிற்கு இன்னுமொரு தரிசனம் ஒரு எழுப்புதலின் போது கிடைத்தது.

அறிவிப்பாளர்: அவுஸ்திரேலியா தேசத்தில் எந்த நகரத்தில்? யுனிடிக்கு எந்த நகரம் என தெரியாது அவளை கர்த்தர் நித்திரையில் தூக்கிச் சென்றார்.

நான் இயேசுவை ஞாயிறு நாளில் சநதித்தேன், அவர் எனக்கு சில நூதனமான காரியங்களை சொன்னார். இயேசு என்னை அவுஸ்திரேலியா தேசத்திற்கு கூட்டிச் சென்ற போது நான் 4 சிநேகிதரைச் சந்தித்தேன், ஜோன், கெனி, மார்க், மேரி. நான் அநேக ஜனங்கள் எழுப்புதலை ருசிப்பார்த்ததால் சந்தோஷமாக களிகூர்ந்து, ஆடிப்பாடுவதையும் கண்டேன். நானும் அவர்களுடன் சந்தோஷமாக, இயேசு அவுஸ்திரேலியா பட்டணத்தில் எழுப்புதலை கொண்டு வந்ததால், நானும் பாடி ஆடினேன். அவுஸ்திரேலியா சபையிற்குள் நான் அநேக தேவதூதர்கள் உள்ளேயும் வெளியேயும் இருப்பதைக்கண்டேன். அவர்கள் வட்டம்வட்டமாக பறந்தார்கள். அவர்களுடைய எக்காளங்களை இயேசுவிற்கு துதிகள் பாடி ஸ்தோத்திரங்கள் செலுத்தி ஊதினார்கள். இயேசு என்னை அதே இடத்திற்கு எடுத்துச்சென்று நாங்கள் திரும்பவும் ஒரு நாள் சந்திப்பதாகக் கூறினார்.





***[End of Video]***

***http://www.youtube.com/watch?v=Fz5In54DLpY***

மொழிபேர்ப்பு: Eugene K Arachchige <rehanypriscilla@yahoo.co.uk>